4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 35 /2022** நாள்: **23.07.2025** ம.சா.**1–** கமலாத்தாள்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1**ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -

எனது மகன் விபத்தில் காலமாகிவிட்டதால் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். 31.10.2019 ல் எனது மகனுக்கு விபத்து நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி நவீன், அன்பரசு சொல்லி எனக்கு தெரியும். எனது மகன் இரு சக்கர வாகனத்தில் அவன் பணிபுரியும் ஓர்க்ஷாப்பில் இருந்து வீட்டிற்கு வரும் போது விபத்து ஏற்பட்டது. 1ம் எதிர்மனுதாரர் காரை ஓட்டிய ஓட்டுநர் என்று சொன்னால் சரிதான். நான் இந்த மனுவில் எனது மகன் சாலையில் செல்லும் போது 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் வேகமாக வந்து மோதி எனது மகன் சாலையில் தூக்கி வீசப்பட்டு பின்னிட்டு அங்கு வந்த லாரி என் மகன் மீது ஏறி இறங்கி விபத்து ஏற்படுத்தியது நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். கார் மோதியிருந்தால் வாகனத்திற்கும் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சாட்சி விபத்தை பார்க்கவில்லை என்று கூறுகிறார். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஆய்வறிக்கையான ம.சா.ஆ.4 ல் காரில் எந்த வித சேதமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் காரணமாக இருந்தால் அதில் சேதம் ஏற்பட்டிருக்கும் எனவே, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் இந்த விபத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் வருமானம் சம்பந்தமாக ஆவணங்களை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வெளி மாநிலத்தவர் என்பதால் வழக்கிற்கு சம்பந்தமில்லாத நபரை இந்த மனுவில் தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மேற்படி 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் காப்பீடு நிறுவனம். விபத்திற்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் பொறுப்பல்ல எனவே, எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. எனது

மகனின் விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கு உடுமலைபேட்டை நீதித்துறை நடுவர் எண்.1 ல் C.C.No.26/2022 ஆக நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது என்று சாட்சி கூறுகிறார்.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

மனு விபத்தில் இறந்து போனது எனது மகன். இந்த மனு தாக்கல் செய்வதற்கான விவரங்களையும், ஆவணங்களையும் நான் தான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். நான் சம்பவ இடத்திற்கு 15 நிமிடத்தில் சென்றேன், ஆனால் விபத்திற்குள்ளான என் மகனை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். விபத்து நடந்த போது என் மகன் ஓர்க் ஷாப்பில் இருந்து வீட்டுக்கு பழனி ரோட்டில் இருந்து கிழக்காக பாலப்பம்பட்டியில் வந்து கொண்டிருந்தார். எனது மகன் வந்து கொண்டிருந்த போது பின்னால் வந்து தான் கார் மோதியது. எனது மகன் பின்னால் வரும் காரை பற்றி அறியாமல் இருசக்கர வாகனத்தில் அப்போது வந்து சாலையின் வலது பக்கம் திரும்பியதால் மேற்படி கார் மோதி விபத்துக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனது மகன் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு பதிவு சான்றிதழ் உள்ளது. எனது மகன் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு மற்றும் பதிவு சான்றிதழ் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தான் மோட்டார் வாகன ஆய்வின் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அபராதம் விதித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது மகன் சாலை விதிகளை கடைபிடிக்காமலும், மோட்டார் வாகன சட்டத்திற்கு விரோதமாகவும் வாகனத்தை ஓட்டி அவராகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. சட்ட விதிகளை மீறி எனது மகன் வாகனத்தை ஓட்டிய காரணத்தினால் நான் கோரும் இழப்பீடு எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது மகன் கீழே விழுந்த பிறகு லாரி மேலே ஏறியதால் தான் இறந்தார் என்றால் சரிதான். காருக்கு பின்னால் குறிப்பிட்ட இடைவெளி விட்டு லாரி வந்திருந்தால் எனது மகனுக்கு இறப்பு ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு லாரி ஓட்டுநர் மட்டும் தான் காரணம் என்றால் சரியல்ல, கார் ஓட்டுநரும் காரணம் என்று கூறுகிறார். போலிசார் 1ம் எதிர்மனுதாரர் மீது மட்டும் விபத்து சம்பந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 4 ம் எதிர்மனுதாரர் எனது மகனின்

இறப்பிற்கு காரணம் என்று போலிசார் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எனது மகனின் இறப்பிற்கு 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்த கடமைபட்டவரல்ல என்றால் சரியல்ல. எனது மகன் ஓர்க் ஷாப் நடத்துவதற்கு தொழில் வரி செலுத்தினாரா என்று எனக்கு தெரியாது, எனது மகன் தான் அதை கவனித்து வந்தார். எனது மகன் வருமான வரி செலுத்தி வந்தாரா என்று எனக்கு தெரியாது. எனது மகன் ஓர்க் ஷாப் நடத்தி வந்தார் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் ஓர்க் ஷாப் நடத்தி வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>6ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் விபத்தை நேரடியாக பார்க்காத காரணத்தினால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவில் 7ம் எதிர்மனுதாரர் எனது கணவர். எனது கணவர் இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்றிதழ் எதுவும் நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் பாலசுப்பிரமணியனுக்கு விபத்து சமயத்தில் திருமணமாகவில்லை என்றால் சரிதான். எனது மகன் தான் விபத்து சமயத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலை விதிகளை கடைபிடிக்காமலும், தலைக்கவசம் அணியாமலும், இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து திடீரென சாலையின் வலதுபுறம் திரும்பிய காரணத்தினால் விபத்து என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் முதலில் எனது மகனை இடித்து விபத்தை ஏற்படுத்தியது கார்தான். மேற்படி கார் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்து பின்னால் மோதியதால் தான் முதலில் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி கார் மோதாமல் இருந்திருந்தால் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு அவர் இறந்திருக்க மாட்டார் என்றால் சரிதான். மேற்படி முதல் விபத்து ஏற்பட்டு எனது மகன் சாலையில் விழுந்த பிறகு மயங்கிவிட்டார் என்றும், பின்னிட்டு 4ம் எதிர்மனுதாரர் லாரியை எனது மகன் மீது மோதுவதற்கு முன்பாகவே நிறுத்திவிட்டார் என்றும், இழப்பீட்டிற்காக 4ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தை பெரிய வாகனம் என்பதால் குற்ற வழக்கில் போலிசார் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகனின் அதிவேகமும், அஜாக்கிரதையும் மற்றும் 1 ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் ஓர்க் ஷாப் நடத்திவந்தார்

என்பதற்கான ஆவணங்களும், அவருடைய வருமானங்கள் பற்றி ஆவணங்கள் நான் இந்த மனு விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் வயதை நிர்ணயம் செய்யும் வகையில் ஆதார் அட்டையோ, பிறப்பு சான்றிதழோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு எனது மகனும், 1ம் எதிர்மனுதாரரும் தான் காரணம் என்பதால் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர்கள்ள அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.